மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 142/2024**

வா.சா. 2 மாடசாமி, த–பெ. சித்திரை

நாள்: 10.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) எங்கள் ஊரில் இருக்கும் நபர்களுக்கு எங்கெங்கே சொத்துக்கள் இருக்கிறது என்றும் சொத்துக்கான விஸ்தீரணம் என்ன என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் தயார் செய்வதற்கு வழக்கறிஞருக்கு தகவல் தெரிவித்தது யார் என்றால் நான் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். ஏற்கனவே தட்டச்சு செய்து வைக்கப்பட்டிருந்தது என்னிடம் படித்து காண்பித்தார்கள் என்று சொன்னால் சரிதான். வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வேலை பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை வருடங்களாக நான் வேலை பார்த்தேன் என்றால் சுமார் 6 வருடங்களாக வேலை பார்த்தேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கிரைய ஆவணம் குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் தற்பொழுது பணிபுரிந்து வரும் பணியில் எனக்கு முன்பு செல் என்ற கருப்பையா பணிபுரிந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அவரை தொடர்ந்து ரஞ்சன் என்பவர் பணிபுரிந்தார் என்று

சொன்னால் சரிதான். அவருக்கு அடுத்ததாக நெடுங்குளத்தைச் சேர்ந்த ஒரு நபர் பணிபுரிந்தார் என்று சொன்னால் சரிதான். எனக்கு முன்னால் பணிபுரிந்த அவர்களை விசாரணை செய்தால் தான் 6 வருடத்திற்கு முன்பு வழக்கு சொத்தில் யாரால், என்ன விவசாயம் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்கான சர்வே எண் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் வாதியிடம் பணிபுரிவதாக அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3) நான் சொல்வது போல வழக்குச் சொத்தில் எந்த காலத்திலும் நான் பணி செய்யவில்லை என்றும் வழக்குக்காக பொய்யாக பணி செய்ததாக கூறுகிறேன் என்றும் அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தில் நான் வேலை பார்த்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல .

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு